DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 05/2023**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 09th day of January 2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 4** | கிராமம் | : | ஆலங்குளம் |
| பெயர் | : | செல்வி | தாலுகா | : | கீழக்கரை |
| க/பெ. | : | தமிழ்சிங்கம் | சமயம் | : | இந்து |
| வயது | : | 38 | ஜாதி | : | தேவேந்திரகுல வேளாளர் |
| தொழில் | : | விவசாயம் | | | |

நாள்: 09.01.2025
நேரம்: 12.35

2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. அவரது தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**முதன்மை விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரிகளை தெரியும், சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு ஒருநாள் 1, 2 எதிரிகள் எங்கள் ஊரில் உள்ள கண்மாயில் குளிக்க சென்றார்கள். நான் எனது வீட்டில் சமைத்து கொண்டிருந்தேன், சத்தம் கேட்டது, வெளியில் சென்று பார்த்தேன். அங்கு 2ம் எதிரியும், அ.சா.1ம் சத்தம் போட்டு கொண்டிருந்தார்கள். நான் பார்த்தபோது 2ம் எதிரியின் வாயில் இருந்து இரத்தம் வந்தது. வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி விசாரணையில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

**<u>அரசு தரப்பு கு.வி.</u>**

கடந்த 11.10.2022ம் தேதி காலை 8.00 மணியளவில் அ.சா.1ம், அ.சா.2ம் அவர்களது வீட்டு முன்பு நின்று பேசி கொண்டிருந்தபோது, இருசக்கர வாகனத்தில் வந்த 1, 2 எதிரிகள் அவர்கள் இருசக்கர வாகனத்தை வீட்டின் முன்பு நிறுத்திவிட்டு, அ.சா.2யை பார்த்து கெட்ட வார்த்தைகளால் அசிங்கமாக பேசி, சுவற்றில் யார் பெயிண்ட் அடித்தது, உனக்கு தெரியுமா என்னை எதுக்கு பேசினாய் என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசினார் என்றால் சரியல்ல. அ.சா.1 ஏன் இவ்வாறு பேசுகிறாய் என்று கேட்டபோது 1, 2 எதிரிகள் அ.சா.1யை அடித்து கீழே தள்ளிவிட்டார்கள் என்றாலும், சண்டையை விலக்க வந்த அ.சா.2யும், 1, 2 எதிரிகள் அடித்தார்கள் என்றாலும் சரியல்ல. அப்போது அருகில் இருந்த நானும், பாலகங்காதரன், காளியம்மாள், மற்றும் நாகவள்ளி ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டபோது, 1, 2 எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2க்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று போலிஸ் விசாரணையில் நான் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் எனது ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் அன்று காலை 8.00 மணியளவில் நான் எனது வீட்டில் சமையலறையில் சமைத்து கொண்டிருந்தேன் என்று சொன்னால் சரிதான். நான், அ.சா.1, அ.சா.2, மற்றும் எதிரிகள் அனைவரும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான். எங்கள் ஊரில் எங்கள் சமூகத்தை சேர்ந்தவர்களை தவிர, இதர சமூகத்தை சேர்ந்தவர்களும் வசித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். அந்தந்த சமூகத்தினர் அவர்அவர்களுக்கு கோவில்கட்டி வழிபட்டு வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். எங்கள் ஊரில் எங்கள் சமூகத்திற்கு 3 குலதெய்வ வழிபாடு நடத்தும் கோவில்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான். எங்கள் ஊர் எல்லையில் உள்ள அய்யனார் கோவிலிலுக்கு எங்கள் சமூகத்தை சேர்ந்தவர்களும், வேறு சமூகத்தை சேர்ந்தவர்களும் சேர்ந்து நிர்வாகம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் அ.சா.1 எங்கள் ஊரின் முன்னாள் தலைவர் என்று சொன்னால் சரிதான். அவர் முன்னாள் எம்.எல்.ஏ.,யின் சகோதரர் என்று சொன்னால் சரிதான். அ.சா.1 எனது ஊரிலும், காவல் நிலையங்களிலும் செல்வாக்கு உள்ள நபர் என்று சொன்னால் சரிதான்.

அ.சா.1ன் வீடு அந்த ஊரில் உள்ள மக்கள் குளிக்க செல்லும் கண்மாய்க்கரைக்கு அருகில் உள்ளது என்று சொன்னால் சரிதான். குளிக்க செல்பவர்கள் அ.சா.1ன் வீட்டை தாண்டி தான் செல்ல வேண்டும் என்று சொன்னால் சரிதான். அ.சா.1 ஊர்த்தலைவராக இருந்தபோது, அவர் ஊர்ப்பணத்தை கையாடல் செய்ததாக ஊரில் உள்ள இளைஞர்கள் சென்று அவரிடம் கேட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். 2022ம் ஆண்டு ஸ்ரீவாழவந்தாள் அம்மன் கோவிலுக்கு செல்லும்போது நான் அந்த கோவிலின்

சுவற்றில் பச்சை, சிவப்பு வர்ணம் அடிக்கப்பட்டிருந்ததை பார்த்தேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்தததாக சொல்லப்படும் 11.10.2022 அன்று அ.சா.1 ம் எதிரிகளும் அ.சா.1 ன் வீட்டு முன்பு போடப்பட்டிருந்த சீட்டிற்கு கீழ் நின்று பேசி கொண்டிருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். நான் சம்பவத்தன்று எனது சமையலறையில் இருந்தபோது, 1, 2 எதிரிகள், அ.சா.1 யை அசிங்கமான, அருவருக்கத்தக்க, முகம் சுளிக்கும்படியான வார்த்தைகளால் பேசியதை நான் கேட்டேனா என்றால் இல்லை. 1, 2 எதிரிகள், அ.சா.1 யை அடித்ததாக நான் பார்த்தேனா என்றால் இல்லை. அ.சா.2 யை, 1, 2 எதிரிகள் திட்டியதையோ, அசிங்கமான வார்த்தைகளால் பேசியதையோ நான் பார்த்தேனா என்றால் இல்லை. எதிரிகள் அ.சா.1 டம் சண்டை செய்ததையோ, அவர்கள் அ.சா.1 க்கு கொலைமிரட்டல் விடுத்ததையோ, நான் பார்த்தேனா என்றால் இல்லை. சம்பவத்திற்கு பின்பு அ.சா.1, அவரது இருசக்கர வாகனத்தை எடுத்து, அதை ஸ்டார்ட் செய்து, அ.சா.2 யை இருசக்கரவாகனத்தில் பின்னால் அமர்த்தி, வடக்கு பக்கமாக சென்றார் என்று சொன்னால் சரிதான். இந்த நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருவதற்கு எனக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதா என்றால் அனுப்பப்பட்டது. என்னை காவல் நிலையத்திலோ, சம்பவ இடத்திலோ போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2025.01.09 16:15:47 +0530

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 05/2023**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 09th day of January 2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 5** | கிராமம் | : | ஆலங்குளம் |
| பெயர் | : | நாகவள்ளி | தாலுகா | : | கீழக்கரை |
| க/பெ. | : | செங்கலுடையார் | சமயம் | : | இந்து |
| வயது | : | 48 | ஜாதி | : | தேவேந்திரகுல வேளாளர் |
| தொழில் | : | விவசாயம் | | | |

நாள்: 09.01.2025
நேரம்: 12.55

2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. அவரது தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**முதன்மை விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரிகளை தெரியும், வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி விசாரணையில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

**அரசு தரப்பு கு.வி.**

கடந்த 11.10.2022ம் தேதி காலை 8.00 மணியளவில் அ.சா.1ம், அ.சா.2ம் அவர்களது வீட்டு முன்பு நின்று பேசி கொண்டிருந்தபோது, இருசக்கர வாகனத்தில் வந்த 1, 2 எதிரிகள் அவர்கள் இருசக்கர வாகனத்தை வீட்டின்

முன்பு நிறுத்திவிட்டு, அ.சா.2 யை பார்த்து கெட்ட வார்த்தைகளால் அசிங்கமாக பேசி, சுவற்றில் யார் பெயிண்ட் அடித்தது, உனக்கு தெரியுமா என்னை எதுக்கு பேசினாய் என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசினார் என்றால் சரியல்ல. அ.சா.1 ஏன் இவ்வாறு பேசுகிறாய் என்று கேட்டபோது 1, 2 எதிரிகள் அ.சா.1 யை அடித்து கீழே தள்ளிவிட்டார்கள் என்றாலும், சண்டையை விலக்க வந்த அ.சா.2 யும், 1, 2 எதிரிகள் அடித்தார்கள் என்றாலும் சரியல்ல. அப்போது அருகில் இருந்த நானும், பாலகங்காதரன், காளியம்மாள், மற்றும் செல்வி ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டபோது, 1, 2 எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2 க்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று போலிஸ் விசாரணையில் நான் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் எனது ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை**

**மறுவிசாரணை – இல்லை**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2025.01.09 16:15:53 +0530